Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C. 4/2025** |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosecution – **PW1** |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | பத்ரோஸ் |
| Father/Husband Name | : | தங்கநாடார் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | சிறப்பு சார்பு ஆய்வாளர் |
| Religion | : | |
| Age | : | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.09.2025

<u>(1ம் எதிரி ஆஜர்படுத்தப்பட்டார், 2ம் எதிரி ஆஜர் இல்லை, 2ம் எதிரி தரப்பில் BNSS 355ன் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)</u>

**முதன்மை விசாரணை:–**

நான் தற்போது இராமநாதபுரம் உச்சிப்புளி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.03.2023ம் தேதி உச்சிப்புளி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது சார்பு ஆய்வாளருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நானும், முதல்நிலை காவலர் 2057 சத்தியராசும் சேர்ந்து சார்பு ஆய்வாளருடன் கடுக்காவலசை விலக்குரோடு அருகில் பகல் 12.00 மணிக்கு சென்றபோது அங்கு இரண்டு நபர்கள் நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் எங்களை பார்த்ததும் அங்கிருந்து விலகி செல்ல புறப்பட்டவர்களை நாங்கள் சுற்றி வளைத்து விசாரித்தபோது தேவதாசன் என்ற தேவா, மரவெட்டிவலசை,

உச்சிப்புளி மற்றும் தினேஷ், ஆற்றாங்கரை இருவரிடமும் விசாரித்தபோது அவர்கள் மேற்கண்ட விலாசத்தை சேர்ந்த நபர்கள் என்று சொன்னார்கள். திருச்சி மத்திய சிறையில் இருந்து காணொளி மூலம் ஆஜர் படுத்தப்பட்ட 1ம்எதிரியை கேட்டபோது சாட்சி அவர் தேவதாசன் என்று கூறினார். மற்றொரு எதிரியான தினேசை பார்த்தால் அடையாளம் காட்ட முடியும். சார்பு ஆய்வாளர் தேவதாசன் என்ற தேவாவிடம் விசாரித்தபோது அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட மனித உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தக்கூடிய வாள் உன்னிடம் இருப்பதாக ரகசிய தகவல் வந்துள்ளதாக கூறி விசாரித்தபோது 2 ¼ அடி நீளமுள்ள 3 இன்ச் அகலமுள்ள வாளை முதுகின் பின்புறத்தில்இருந்த வாளை வீச்சருவாளை எடுத்து ஆஜர் செய்தார். சார்பு ஆய்வாளர் எதிரிகள் இருவரையும் கைது செய்து கைது செய்த இடத்தில் பொதுமக்கள் யாரும் ஒப்புதல் வாக்குமூலத்திலோ, அத்தாட்சியிலோ கையெழுத்து செய்ய முன்வராததால் என் முன்னிலையிலும், முதல் நிலை காவலர் சத்தியராஜ் முன்னிலையிலும் ஒப்புதல் வாக்குமூலத்திலும், அத்தாட்சியிலும் கையெழுத்து பெற்று, எதிரிகளை கைப்பற்றப்பட்ட ஆயுதத்துடன் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து 15.00 மணிக்கு உச்சிப்புளி காவல்நிலைய குற்ற எண். 79/2023 சட்ட பிரிவுகள் 25(1) (ஏ) ஆயுதங்கள் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்ய நானும், முதல்நிலைகாவலரும் ஆய்வாளருக்கு உதவியாக இருந்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1ஆவது கையெழுத்து என்னுடையது- 2வது கையெழுத்து முதல்நிலைகாவலர் சத்தியராசுடையது. என்னிடம் காட்டப்படும் வீச்சருவாள்தான் 1ம் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட வீச்சருவாள். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து மட்டும், **அ.சா.ஆ.1**. அத்தாட்சியில் உள்ள கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.2**. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-

சார்பு ஆய்வாளருக்கு எத்தனை மணிக்கு யார் மூலம் இரகசிய தகவல் வந்தது என்றால் தெரியாது. காவல் நிலையத்திலிருந்து எத்தனை மணிக்கு

கிளம்பினோம் என்றால் 11.55 மணிக்கு கிளம்பினோம். எத்தனை மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்றோம் என்றால் 12.00. யார்யார் எந்தெந்த வாகனத்தில் சென்றோம் என்றால் நானும், சத்தியராசும் ஒரு பைக்கிலும், சார்பு ஆய்வாளர் ஒரு பைக்கிலும் சென்றோம். காவல் நிலையத்திலிருந்த சம்பவ இடம் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 2 கிமீ. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம்கடுககான்வலசை விலக்கு ரோடு மக்கள் அதிகம் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் ஓரளவுக்கு இருக்கும். அந்த விலக்குரோட்டில் கடைகளும், வீடுகளும் உள்ளது என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் தயார் செய்தது யார் என்றால் சார்பு ஆய்வாளர். ஒப்புதல் வாக்குமூலம் தட்டச்சு செய்யப்பட்டதா அல்லது கையால் எழுதப்பட்டதா என்றால் கையால் எழுதப்பட்டது. நான் அடையாளம் காண்பித்த வீச்சருவாள் சாதாரணமாக கிடைக்கக்கூடிய பொருள் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும் எங்கள் முன்னிலையில் 1ம் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும் அதேபோல் 1ம் எதிரி எந்த அருவாளையும் எடுத்து ஆஜர் செய்யவில்லைஎன்றால் சரியல்ல. எதிரிகள் மீது ஏற்கனவே எங்கள் காவல் நிலையத்தில் நிறைய வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றால் சரிதான். எதிரிகளின் வீடு எங்கு உள்ளது என்பது எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும், மேலதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.